# 07 எமது சமூகம்

மனிதர்கள் இல்லாமல் சமூகம் இல்லை. மனிதர்களின் உருவாக்கத்திற்கு குடும்பமே அடிப்படையாகும். எனவே சமூகத்தின் உருவாக்கத்திற்கு குடும்பம் அடிப்படையாக அமைகின்றது. மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆவான். சமூகத்தில் வாழும் மக்கள் தமக்குரிய உரிமைகளை அனுபவித்துக் கொண்டே கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். இன்றைய சமூகத்தில் குடிமக்கள் உரிமைகளை பெறுவதில் காட்டுகின்ற அக்கறை தமது கடமைகள் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் காட்டுவது குறைவாகும். இதனால்தான் குடும்பங்களிலும் பாடசாலைகளிலும் ஏனைய நிறுவனங்களிலும் பிரச்சினைகள் உருவாகின்றன.

இவ் அலகை கற்பதன் மூலம் நீங்கள் வாழும் சமூகம் பற்றியும் சமூகத்தில் நிலவும் இடைத் தொடர்புகள் பற்றியும் அறிந்து கொள்வீர்கள். அத்துடன் சமூகத்தில் உங்களின் கடமைகள் பொறுப்புக்களை நிறைவேற்றி சட்டத்திற்கு உட்பட்ட வகையில் உங்கள் உரிமைகளை அனுபவிக்கக்கூடிய ஒரு சிறந்த பிரஜையாக உருவாகுவதற்குரிய தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வீர்கள்.

## 7. 1 சமூகம்

*"மனிதர் இல்லாமல் சமூகம் இருக்க முடியாது ஆனால், மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதால் மாத்திரம் ஒரு சமூகம் உருவாகிவிட முடியாது"*


சமூகம் பற்றி பல வரைவிலக்கணங்கள் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

"ஒவ்வொரு தனியாட்களும் தமக்கிடையே அறிமுகமாகி இடைத் தொடர்பை உருவாக்கிக்கொள்வதால் உருவான மக்கட் குழுவின் கூட்டு."

"வேறுபடுத்தப்பட்ட ஒரு நிலப்பரப்புக்குள் நிரந்தரமாக வாழும் மக்கள் தமது ஆசைகள், தேவைகள், விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கிக் கொண்டுள்ள நிறுவனங்கள், சங்கங்கள், அமைப்புக்கள், கூட்டமைப்புக்களின் ஒட்டு மொத்தமான இணைப்பு"

மேற்படி வரைவிலக்கணங்களில் இருந்து நோக்குவோமாயின் சமூகம் என்பதனால் கருதப்படுவது முழு மனித சமுதாயத்தையுமல்ல.. சமூகம் என்பது குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வாழும் குடும்பங்களினதும் அவை தமது வாழ்க்கைக்காக உருவாக்கிக் கொண்ட நிறுவனங்களினதும் கூட்டு இணைப்பே ஆகும்.

மேற்படி வரைவிலக்கணங்களில் இருந்து நாம் பார்க்கும் போது சமூகமானது பல அலகுகளைக் கொண்டதாக காணப்படுகின்றது. அவை குடும்பம், அயலவர், பாடசாலை, சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், தொடர்பூடகங்கள் போன்றன வாகும். உரு7.1 இதனை காட்டுகின்றது.




சமூகத்தின் மிக முக்கியமான அலகு குடும்பம் ஆகும். எனவே குடும்பங்கள் சிறப்பாக இயங்குவதன் மூலம் சமூகம் நிலைத்திருக்கும். மக்கள் தமது வாழ்க்கையை சிறப்பாக குடும்பத்தில் கொண்டு நடாத்துவதற்கு எடுத்த முயற்சிகளின் விளைவாக சமூகம் உருவாகியது.

**செயற்பாடு**

1. **உங்கள் சமூகத்தில் காணப்படும் சமூக அலகுகளை பட்டியல்படுத்துக.**
2. **உங்கள் அயலில் உள்ள பல உறுப்பினர்களைக் கொண்ட மூன்று குடும்பங்களை தெரிவு செய்து, அவர்களின் உறவு முறை வயது, தொழில் இயல்புகளை அட்டவணைப்படுத்துக.**

## 7.2 மக்கள் சமூகத்தில் நிலவும் இடைத்தொடர்புகள்


**ஒருவன் சிறந்த பிரஜையாக வாழ்வதற்கு பிறப்புரிமையால் பெற்றுக் கொள்ளும் ஆற்றல்கள் மட்டும் போதாது அவன் சமூகத்தில் உள்ள பல நிறுவனங்களிலிளிருந்தும் பல விடயங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும்.**

மனிதர்கள் பல்வேறு கருமங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர். இக் கருமங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. எனவே மனிதன் தனித்து வாழ முடியாது. மனித வரலாற்றைப் பின் நோக்கிப் பார்த்தால் மனிதன் கூட்டம் கூட்டமாகவே வாழ்ந்துள்ளான். கூட்டமாக வாழும் பொழுது ஒருவர் ஒருவருக்கிடையில் அல்லது ஒருவர் பலருடன் தொடர்பு கொள்ள வேண்டி இருந்தது. இதன் வளர்ச்சியே இன்று இடைத்தொடர்புகள் என்கின்றோம்.

இடைத்தொடர்பு என்பது தனி நபர்களுக்கிடையில், நிறுவனங்களுக்கிடையில் ஏற்படும் பரஸ்பர தொடர்பாகும்.

இன்றைய சமூகத்தில் நிலவும் இடைத்தொடர்புகள் மிகவும் பரந்தவை. நீங்கள் ஏன் எவ்வாறு ஏனையவர்களுடன் தொடர்பு கொள்கிறீர்கள் என சிந்தித்துப் பாருங்கள்.

### குடும்பத்தில் நிலவும் இடைத்தொடர்புகள்




சமூகத்தின் அடிப்படையானதும் மிகவும் முக்கியத்துவம் உடையதுமான அலகு குடும்பம் ஆகும். குடும்பத்தில் உங்களுடைய முதல் தொடர்பு உங்கள் தாயாருடன் தான் ஆரம்பமாகிறது.

நீங்கள் குழந்தையாக இருந்த போது பசியால் அழுது இருப்பீர்கள். உடனே உங்கள் அம்மா பால் கொடுத்திருப்பார். அழுகை மூலம் நீங்கள் உங்கள் தேவையை வெளிப்படுத்த அதை புரிந்த உங்கள் அம்மா உங்களுக்கு பால் கொடுத்தார்.

இங்கே உங்களுக்கும் அம்மாவுக்கும் இடையில் ஏற்பட்ட இடைத்தொடர்பு மூலம் உங்கள் பசி தீர்ந்தது. இவ்வாறுதான் பிள்ளைகளே மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையும் இடைத் தொடர்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும்.






உரு 7.2


உருவில் காட்டப்பட்டிருப்பது போல பாடசாலை செல்லும் வரை உங்கள் தொடர்பு உங்களது குடும்ப அங்கத்தவர்களிடையேதான் பெரும்பாலும் இருந்திருக்கும். நீங்கள் பாடசாலை செல்லும் வயதை அடைந்ததும் உங்களை உங்களது பெற்றோர் பாடசாலையில் அனுமதித்தார்கள். பாடசாலையில் உங்களது இடைத்தொடர்பு குடும்பத்தில் இருந்ததிலிருந்து வேறுபட்டதாக காணப்பட்டிருக்கும். அதை உங்களால் உணரக்கூடியதாக உள்ளதா? அடுத்து நாம் பாடசலையில் எவ்வாறு பரஸ்பரம் இடைத்தொடர்பு நடைபெறுகிறது என பார்ப்போம்.

**செயற்பாடு**

(1) மாணவர்கள் குழுக்களாக இயங்கி ஒவ்வொரு குழுவும் குடும்பங்களாக வகிபாகமேற்று குடும்பங்களுக்குள்ளே இடைத்தொடர்புகள் எவ்வாறு நிகழ்கின்றன என நடித்துக் காட்டுக

## பாடசாலையில் நிலவும் இடைத்தொடர்புகள்.


நீங்கள் பாடசாலைக்கு முதன் முதலாக வந்த நாளை நினைத்துப்பாருங்கள். இன்று வரை எத்தனை பேருடன் தொடர்பு கொண்டிருப்பீர்கள். சமூகத்தின் தேவைக்காக உருவாக்கப்பட்டதே பாடசாலை ஆகும். பாடசாலையில்தான் நீங்கள் ஒழுங்கு முறையான கல்வியை பெற்றுக் கொள்ளுகிறீர்கள்.




உரு 7.3

நீங்கள் பாடசாலையில் தொடர்பு கொள்ளக் கூடியவர்களை உரு 7-3 இல் காட்டப்பட்டுள்ளது. உங்கள் வகுப்பில் உள்ள நண்பர்களுடன் தான் நீங்கள் மிகவும் நெருக்கமாக தொடர்புகளைப் பேணுவீர்கள். எனவே நல்ல நண்பர்களைப் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மேல், கீழ் வகுப்பு மாணவர்களுடன் நீங்கள் தொடர்பினை ஏற்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. அதே போல் அவர்களும் உங்களுடன் தொடர்பினை ஏற்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களும்

உண்டு. அதே போல் பாடங்களை மட்டுமன்றி ஒழுக்கத்தையும் கற்றுத் தருபவர் ஆசிரியர் ஆவர். பாடசாலையின் செயற்பாட்டில் மிக முக்கிய பங்கு வகிப்பவர் ஆசிரியர் ஆவர்.




உரு 7-4

பாடசாலையில் நிலவும் இடைத்தொடர்பினை உரு 7-4 இல் அவதானிக்கலாம். மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், பெற்றோர் ஆகியோர் ஒருவருடன் ஒருவர் இடைத்தொடர்பு கொள்வதன் மூலமே பாடசாலை இயங்குகின்றது.

பாடசாலையில் நீங்கள் பலருடன் தொடர்பினை பேணுவீர்கள். அத்தொடர்புகள் மூலம் பல படிப்பினைகளைப் பெற்றிருப்பீர்கள். அவை எவையென சிந்தித்துப் பாருங்கள்.

எப்போதும் ஆசிரியர்களுடன் நல்ல உறவினைப் பேணுதல் வேண்டும். ஆசிரியர்களுக்கு உரிய கௌரவமும் மதிப்பும் எல்லா இடங்களிலும் எல்லா நேரங் களிலும் கொடுக்கப்படல் வேண்டும்.



பாடசாலையில் கல்வி, நிர்வாகம் அனைத்திற்கும் பொறுப்பாக இருப்பவர் அதிபர் ஆவர். அவருடனும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களும் உங்களுக்கு ஏற்படும். இதே போல் பாடசாலையில் கடமைபுரியும் ஏனைய ஊழியர்களுடனும் தொடர்பு கொள்ள வேண்டிய தேவைகள் ஏற்படும்.

நீங்கள் மட்டுமன்றி ஆசிரியர்கள் ஆசிரியர்களுடனும் ஆசிரியர்கள் அதிபருடனும் ஏனைய ஊழியர்கள் அதிபர் ஆசிரியர்களுடனும் பரஸ்பரம் இடைத்தொடர்பில் இருப்பார்கள்.

**செயற்பாடு**

1 **ஆசிரியர்- மாணவரிடையே காணப்படும் சிறந்த தொடர்பை வெளிக்காட்டும் கதைகள் அல்லது பாடல்களைச் சேகரித்து அவை பற்றி வகுப்பில் கலந்துரையாடவும்.**


## சமய நிறுவனங்களுடனான தொடர்புகள்

சமூகத்தின் அங்கமான குடும்பம், பாடசாலை தவிர்ந்த சமய நிறுவனங்களும் நாம் தொடர்பு கொள்ளும் முக்கிய நிறுவனங்களாகும். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பெற்றோர் பின்பற்றும் சமயத்தையே பின்பற்றுவீர்கள்.





சமயங்கள் எல்லாம் எது சரியானது, எது சரியற்றது, எது பொருத்தமானது, எது பொருத்தமற்றது என போதிக்கின்றது. அத்துடன் வாழ்க்கையில் துன்பங்கள் வரும் பொழுது மனதிற்கு தைரியத்தையும் கொடுக்கின்றது. சமயங்கள் எமது கலாசாரங்களை பேணுவதற்கு வழி செய்வதோடு சேர்ந்து வாழும் வழியையும் எங்களுக்குக் காட்டுகின்றது.



எங்களது வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு முக்கிய சம்பவங்களின் போதும் சமய வழிபாடுகள் சடங்குகளில் பங்கு பற்றுகின்றோம். உதாரணமாக; பிறப்பின் போது, திருமணத்தின் போது, இறப்பின் போது சமய சடங்குகள் நடைபெறுவதை நீங்கள் அவதானிக்கலாம்.

இவ்வாறு நாம் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை சமய நிறுவனங்களுடன் பரஸ்பரம் தொடர்பு கொண்ட வண்ணமே உள்ளோம்.



**செயற்பாடு**

**உங்கள் குடும்பத்தில் சமயச் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த சம்பவங்களை பற்றி சக மாணவர்களுடன் கலந்துரையாடவும்.**

## சமூகத்திலுள்ள இயக்கங்கள், அமைப்புக்களுடனான தொடர்புகள்

இளைஞர்களும் முதியோர்களும் சமூகத்தின் தேவை கருதி பல இயக்கங்கள் அமைப்புக்களை உருவாக்கியுள்ளனர். அவ்வாறான அமைப்புக்களில் அங்கத்தவராவதன் மூலம் அல்லது அதன் செயற்பாடுகளின் போது அவற்றோடு பரஸ்பரம் தொடர்பு கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்படுகின்றன.

**இயக்கங்கள் / சங்கங்கள் / அமைப்புக்கள்**

- இளைஞர் விவசாய கழகங்கள்
- தேசிய இளைஞர் சேவை மன்றம்
- கிறிஸ்தவ இளைஞர் சங்கம்
- இந்து இளைஞர் மன்றம்
- முஸ்லிம் மஜ்லிஸ்
- பௌத்த இளைஞர் சங்கம்
- செஞ்சிலுவைச் சங்கம்
- மகளிர் இயக்கம்
- மரண உதவிச் சங்கம்
- கிராமிய அபிவிருத்தி சங்கம்
- சர்வோதய இயக்கம்
- சன சமூக நிலையம்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

உருவில் காட்டப்பட்டுள்ளவாறு சமூகத்தில் பல அமைப்புக்கள் காணப்படுகின்றன. இவ் அமைப்புகளின் மூலம் சமூகத்தின் பொது நலன் உயர்த்தப்படும். இவ் அமைப்புக்கள் அல்லது இயக்கங்கள் சமூக பொது நலனை உயர்த்தக் கூடிய பிரஜைகளையும் உருவாக்குவதற்கு துணை செய்கின்றன.

**செயற்பாடு**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**(1) உமது பிரதேசத்தில் இயங்கும் சங்கங்கங்கள் அமைப்புக்கள் எவை?**


**(2) அவ்வமைப்புக்கள் அல்லது சங்கங்கள் சமூகத்திற்கு ஆற்றும் சேவைகளைக் குறிப்பிடுக**

## சமூகத்தில் முக்கியம் பெறும் நபர்களுடனான தொடர்பு

சமூகத்தில் பல அமைப்புக்கள் செயற்படுவது போல அரசாங்க திணைக்களங்கள், தனியார் நிறுவனங்களில் கடமைபுரியும் மக்களுக்குதவுகின்ற நபர்களும் காணப்படுகின்றனர். இவர்களுடனான தொடர்புகள் எமது தேவையை நிறைவேற்ற அவசியமாகும்.

கிராம சேவகர், பிரதேச செயலாளர், பொலிஸ் அதிகாரி, தாதி, வைத்தியர் போன்றவர்கள் சமூகத்தில் காணப்படுகின்ற முக்கிய நபர்களில் சிலர் ஆவர். இவர்கள் பல்வேறு துறைகளை சார்ந்தவர்களாக இருப்பதால் பல்வேறு தேவைகளையும் நிறைவேற்ற மக்கள் இவர்களுடன் பரஸ்பரம் தொடர்புகளை ஏற்படுத்துகின்றனர்.

உதாரணமாக, உங்கள் வீட்டில் பயன்தரும் மரம் ஒன்றை வெட்டவேண்டிய அவசியம் உங்களுக்கு ஏற்படின் நீங்கள் அம் மரத்தை உடனடியாக வெட்ட முடியாது. இதற்கு நீங்கள் பிரதேச செயலாளரிடம் இருந்தே அனுமதியைப் பெற வேண்டும். அனுமதி பெறுவது தொடர்பாக உங்களுக்கும் அனுமதி தரும் நபர்களுக்கமிடையிலான இடைத்தொடர்பினை உரு 7-6 காட்டுகிறது.




உரு 7-6

நீங்கள் மரம் வெட்டுவதற்கான விண்ணப்பப் படிவத்தை கிராம சேவையாளரிடம் கையளிக்க; அவர் அதனை பரிசீலனை செய்து பிரதேச செயலாலரிடம் கையளிக்க; பிரதேச செயலாளர் அது தொடர்பான துறையினரிடம் ஆலோசனை பெற்று, கிராம சேவையாளருக்கு அனுமதி வழங்க; கிராம சேவகர் உங்களுக்கு அனுமதி வழங்குவார். இங்கே பணி ரீதியாக ஒரு ஒழுங்கு முறை பின்பற்றபட்டுள்ளமையை நீங்கள் அவதானித்து இருப்பீர்கள். இவ்வாறுதான் ஏனைய விடயங்களிலும் நாம் இடைத்தொடர்பு கொள்கின்ற போது ஒரு ஒழுங்கு முறையைப் பின்பற்ற வேண்டும்.

## இடைத் தொடர்புகளின் முக்கியத்துவம்

சமூகம் என்பது பல அலகுகளின் கூட்டு இணைப்பு என்றும் அவற்றுக்கிடையே தொடர்புகள் நிலவுகின்றன என்றும் முன்னர் கற்றுள்ளீர்கள். எனவே பல அலகுகள் இணைந்து உருவாக்கப்பட்ட சமூகம் தொடர்ந்து நிலைபெறுவது அதன் அங்கத்தவர்களின் திறமையிலேயே தங்கியுள்ளது அத்துடன் சமூகத்தில் புதிதாக சேரும் புதிய அங்கத்தவர்களும் அத்திறமைகளைப் பெறல் வேண்டும். அப்பொழுதுதான் சமூகம் தொடர்ந்து நிலைபெறும். இதற்கு அங்கத்தவர்களிடையே இடைத்தொடர்பு அவசியம்.



உரு 7.7

உரு 7.7 இல் காட்டப்பட்டவாறு தனியாள் தனியாளுடனும் நிறுவனங்களுடனும் பரஸ்பரம் இடைத் தொடர்பினை ஏற்படுத்துகின்ற போது சமூகம் நிலைத்திருக்கும்.இடைத் தொடர்புகள் மூலம் சமூகத்தின் அங்கத்தவன் என்ற தனிமனிதன் சமூகத்திற்கு பொருத்தமானவனாக மாற்றப்படுகின்றான். அத்துடன் பின்வரும் விடயங்களையும் கற்றுக்கொள்கின்றான்.

- சமூகம் பற்றிய விளக்கம்
- அறிவு
- நுண்மதி
- மனப்பாங்கு திறன்
- அறநெறிகள்
- சவால்களை எதிர் கொள்ளும் தன்மை
- தன்னை கட்டுப்படுத்தும் தன்மை
- பழக்க வழக்கங்கள்
- மொழியாற்றல்

தனிஒருவனாக சாதிக்கமுடியாதவற்றை கூட்டாக இணைந்து பரஸ்பரம் தொடர்பு கொள்வதன் மூலம் சாதிக்கலாம். உதாரணமாக ஒரு தேன் கூட்டை கவனித்து பாருங்கள் ஒரு தேனியால் அக் கூட்டை கட்ட முடியுமா? பல தேனீக்கள் சேர்ந்து தத்தமது கடமையைச் செய்யும் போது அழகான தேன் கூடு உருவாகின்றது. இதே போல் எம்மாலும் முடியும்.



படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒவ்வொரு வரும் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு செயற்படு கின்றனர். இதன் மூலம் பாரிய வேலையை ஒரே நாளில் சிறப்பாக செய்து முடிக்கக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் நேரமும் செலவும் மீதமாகிறது. எனவே கூட்டாக இணைந்து பரஸ்பரம் தொடர்பு கொள்வதன் மூலம் தனி ஒருவரால் சாதிக்க முடியாத-வற்றை சாதிக்கலாம். இது சமூகத்தின் நிலைப்பாட்டினை உறுதி செய்யும் ஒரு நடவடிக்கை யாகும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**செயற்பாடு**

(1) மாணவர்கள் குழுக்களாக இயங்கி பாடசாலையில் கூட்டாக செயற்படுத்தக் கூடிய வேலைத்திட்டம் ஒன்றை ஒவ்வொரு குழுவும் தயாரித்து வகுப்பில் சமர்பிக்குக.

(2) சமூகத்தில் மக்களுக்கு உதவுகின்ற முக்கிய நபர்களை பட்டியல் படுத்துக?

(3) இடைத்தொடர்புகள் மூலம் கிடைக்கும் நன்மைகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக?

## 7.3 சமூகம் தொடர்பான எமது கடமைகளும் பொறுப்புகளும்

சமூகத்தின் வளர்ச்சியானது சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் சமூகத்திற்கு ஆற்றியுள்ள செயல்களிலேயே தங்கியுள்ளது. நாம் செய்யும் எந்தவொரு செயலும் சூழலில் வசிப்போரை குழப்பாதவாறு அமைய வேண்டும். சமூகத்தில் உங்களுக்கென சில பொறுப்புக்களும் கடமைகளும் காணப்படுகின்றது. சமூகத்திற்கோ அல்லது அதன் உறுப்பினர்களுக்கோ நன்மை பயக்கும் விதத்தில் எம்மால் கட்டாயமாக நிறைவேற்றபட வேண்டியவை **கடமைகள்** எனப்படுகின்றது.

கடமைகளை இரண்டு வகையாகப் பிரித்து நோக்கலாம். அவை: சட்டரீதியான கடமை, பண்பாட்டு ரீதியான கடமை ஆகியனவாகும். சட்டரீதியான கடமை சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ளது. அதாவது, அரசாங்கத்திற்கு கட்டுப்படுதல், பாடசாலை சட்டங்களை மதித்து நடத்தல், அரச சட்டங்களை பின்பற்றுதல், தொழிற் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றல் என்பனவாகும்

பண்பாட்டு ரீதியான கடமை என்னும்போது அவை சமூக நன்மை கருதி சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மரபுகளாகும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

உதாரணமாக பெற்றோரை பராமரித்தல், முதியோரை மதித்தல், ஒழுக்கமாக நடந்து கொள்ளல், அவர்கள் சொற் கேட்டு நடத்தல், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் எமது கடமையாகும்.



நாம் சமூகத்திலுள்ள பொதுச் சொத்துக்களான பாடசாலை, வைத்திய சாலை, சமய நிறுவனங்கள் பொது சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் என்பவற்றை பாதுகாக்க வேண்டும். இன, மத வேறுபாடு இல்லாமல் சமூக பணிகளில் ஈடுபட வேண்டும்.

பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு சூழல் தொடர்பான அறிவு அவசியம். பொறுப்புக்கள் என பிரித்துக் கூறப்பட்டுள்ளவற்றை நாம் மீறுதல் கடினமாகும். சிறு வயதிலிருந்தே உங்களுக்கு உங்களது கடமையை நிறைவேற்றும் வழிமுறைகள் பற்றிய அறிவுரை வழங்கப்பட்டிருக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். உங்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றாமை சட்ட ரீதியானதொரு தவறாகும். நாம் சமூகப் பொறுப்புடையவராக வாழ உதவும் கடமைகளும் பொறுப்புக்களும் வேறுபடுத்த முடியாதவையாகும்.

சமூகத்தில் எமக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டும் என உறுதி கூறுவோம். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய நாடு தொடர்பானதும் சமூகம் தொடர்பானதுமான கடமை பொறுப்புக்களை நிறைவேற்றும் அதிகாரம் உண்டு.

ஒரு சமூகத்தின் மேன்மைக்கு அங்கு நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களும் ஒரு காரணமெனலாம். சட்டங்களை உருவாக்கல், அவற்றை நடைமுறைப்படுத்தல், கடைப்பிடித்தல், பாதுகாத்தல், மதித்தல் என்பன ஒரு சிறந்த சமூகத்தின் பொறுப்பாகும். அவ்வாறான சட்டங்களை பாதுகாத்தலின் மூலமாக சந்தோஷமானதொரு வாழ்வை கழிக்க ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுண்டு. நாம் வாழும் சமூகத்திற்காக நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்பும் கடமையும் காரணமாக எமது சமூகம் கட்டியெழுப்பப்படும். இவ்வாறானதொரு சூழலில் வாழ்தல் எமக்கு சந்தோஷமானதாகும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பல்வேறு வகையான குடும்பங்களில் இருந்து பாடசாலை சமூகத்திற்கு மாணவர்கள் வருகை தருகின்றனர். பாடசாலை; மாணவர்களை சிறந்த ஒழுக்கமுடையவர்களாகவும், நற்பண்புடையவராகவும், நாட்டிற்கு சிறந்த பிரஜையாகவும் உருவாக்குகின்றது. பாடசாலை மாணவருக்கு உதவுவதற்காக மதகுருமாரினதும் பொதுத்துறையினதும் சேவையைப் பெற்றுக் கொள்கிறது. பாடசாலை சமூகத்தின் அறிவு வளர்ச்சியடையவும் சுகாதாரப் பழக்க வழக்கங்களையும் பின்பற்றவும் தொற்று நோய்த்தடுப்பிலும் நற்பண்புகளை விருத்தி செய்யவும் சுற்றாடலை நேசிக்கவும் நவீன தொழிநுட்ப அறிவை பெறவும் கற்றுக் கொடுக்கிறது.

நீங்கள் சமூகத்தில் ஒரு நற்பிரஜையாக செயற்பட வேண்டுமாயின் பாடசாலை சமூகத்தில் உங்களுக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் சரியான வகையில் நிறைவேற்ற வேண்டும்

## பாடசாலை மாணவருக்குரித்தான கடமைகளும்பொறுப்புக்களும்

- ☞ பாடசாலைச் சட்டங்களைப் பின்பற்றல்.
- ☞ ஆசிரியர், அதிபரை மதித்தல்.
- ☞ குறித்த நேரத்திற்குப் பாடசாலைக்கு செல்லல்.
- ☞ ஒழுக்கத்தை பேணல்.
- ☞ நல்ல நடத்தையைக் கொண்டிருத்தல்.
- ☞ பாடசாலை சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- ☞ பாடசாலைக் கொடி, பாடசாலைக் கீதம் என்பவற்றுக்கு மதிப்பளித்தல்
- ☞ ஏனைய மாணவருடன் ஒற்றுமையாக செயற்படுதல்.
- ☞ கல்வி தொடர்பான எல்லா செயற்பாடுகளிலும் ஈடுபடல்.
- ☞ பாடசாலையின் புகழுக்கு இழுக்கு ஏற்படாதவாறு நடந்து கொள்ளல்.
- ☞ பாடசாலை சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல்.

பாடசாலையில் உங்களது திறமைகளை வளர்த்துக் கொள்வது உங்களது பொறுப்பாகும். பாடசாலையை விட்டு வெளியேறிய பின் பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கும் வேலைத்திட்டத்திற்கும் நீங்கள் உதவலாம்.

நாம் வளர்த்துக் கொள்ளும் திறன்களுக்கு ஏற்பவே தொழில் கிடைக்கும். அத் தொழில் எதுவாயினும் நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

அவ்வாறு தொழிலை பெற்றுக் கொள்கின்ற பொதுத்துறை, அரசாங்கத்துறை, தனியார்துறைகளில் எம்மால் நிறைவேற்றப்படவேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும் பல உண்டு. அவை:

- ☞ உரிய நேரத்திற்கு வேலைக்குச் செல்லல்.
- ☞ கொடுக்கப்பட்ட வேலையை ஒழுங்காகச் செய்தல்.
- ☞ வேலை செய்யும் இடத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் வேலை செய்தல்.
- ☞ நிறுவனத்தின் நிர்வாகம், தொழில் தொடர்பாக தமக்கு அளிக்கப்பட்ட கடமைகளைச் செய்தல்.
- ☞ நிறுவனத்தின் சட்டத்தைப் பாதுகாத்தல்.
- ☞ நிறுவனத்தின் ஊழியர்களின் நலன்களை கருத்திற் கொண்டு செயலாற்றல்
- ☞ நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகும்.

பாடசாலை, வைத்தியசாலை, தபாற்கந்தோர் ஆகியன சமூக உறுப்பினருக்காக சேவைகளை வழங்கும் பொது நிறுவனங்களாகும். தனி நபர்களின் சமய கலாசார தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள வணக்கத் தலங்களும் சமூக அமைப்புக்களாகக் கருதப்படுகின்றன. சமூகத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் இவ்வாறானஅமைப்புகளும் நிறுவனங்களும் வழிவகுக்கின்றன. பல்வேறுவகையான தேவைகள் இந்நிறுவனங்களால் நிறைவேற்றப்படுகின்றன.

எமது சமூகத்தில் கல்வி சம்பந்தமாக பல பாடசாலைகளும் சட்டங்கள் பாதுகாப்பு சம்பந்தமாக பொலிஸ் நிறுவனங்களும், முப்படைகளும் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாறான பொது நிறுவனங்களின் மூலம் எமக்கு பல விதமான உதவிகளும் பாதுகாப்பும் கிடைக்கின்றது. நிறுவனங்கள் மாத்திரமன்றி ஏனைய சமூக மக்களால் நிறுவப்படும் அமைப்புக்களும் பல காணப்படுகின்றன. மக்களின் பாதுகாப்பு சட்டத்திட்டங்கள் பற்றியும் இவ் அமைப்புக்கள் கவனம் செலுத்துகின்றன. இந்நிறுவனங்கள் மூலம் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து தத்தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். அதேபோல் உறுப்பினர்களுக்கு அந்நிறுவனத்தால் நிறைவேற்ற வேண்டிய பல பொறுப்புக்களும் உண்டு.

**செயற்பாடு**

[01] பாடசாலைக்குச் செய்யக் கூடிய கடமைகளையும் பொறுப்புக்களையும் பற்றி பின்வரும் சொற்களை கொண்டு வசனம் அமைக்குக. ஒற்றுமை, ஒழுக்கம், கால அட்டவணை, பொதுவான ஒழுக்கம், பொதுச்சொத்து, கல்வி, கட்டளை, திறமை, வகுப்பறை, ஆசிரியர், சூழல், புகழ், நேரம் தவறுதல்

[02] உங்கள் வகுப்பறையை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பதற்கு உங்களால் மேற்கொள்ளக் கூடிய கடமைகளையும் பொறுப்புகளையும் பற்றிக் கலந்துரையாடுக.

[03] உமது பிரதேசத்தில் உள்ள நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் சேவைகளைப்பட்டியல்படுத்துக.

## 7.4 சமூகத்திற்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும்.

எமது நாட்டிலுள்ள பொது வசதிகள் எல்லாவற்றையும் குடிமகன் என்ற வகையில் அனுபவிக்கும் உரிமை எமக்கு உண்டு. கடமைகள், பொறுப்புக்களை நாம் அரசாங்க சட்டதிட்டங்கள், மரபுகள், பழக்கவழக்கங்கள், சுய கட்டுபாடு என்பவற்றினூடாக நடைமுறைப்படுத்தலாம். நாம் நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் போது நாடு முன்னேற்றம் அடையும்.

**எம்மால் சமூகத்திற்கு நிறைவேற்றப்படவேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்**

- ☞ நாட்டிலுள்ள சட்டங்களை மதித்து நடத்தல்.
- ☞ நாம் வாழுகின்ற சூழலை பாதுகாத்தலும் பராமரித்தலும்.
- ☞ தனி நபருக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றுதல்.
- ☞ மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் நடத்தல்.
- ☞ பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- ☞ நாட்டில் வாழுகின்ற எல்லா மக்களையும் இலங்கையர் என மதித்தல்.

சமூகத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்காகவும் ஒழுங்கைப் பேணுவதற்காகவும் நாட்டில் பலவகையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.


இச் சட்டங்கள் மீறப்படும் போது சமூகத்தில் பல சீர்கேடுகள் விளையும். நாம் எமது குடும்பத்தில் ஓர் அங்கத்தவனாக செயற்படும் போதும், பொருட்களை வாங்கும் போதும், விற்கும்போதும், தனி நபருடன் தொடர்பு கொள்ளும் போதும், தொழில் செய்யும் இடத்தில், வீதியின் ஒழுங்கை பின்பற்றும் சந்தர்ப்பங்களில், சட்டதிட்டங்களை பின்பற்ற வேண்டும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சட்டங்களுக்கு கௌரவமளித்து செயற்படுதல் எமது முக்கிய கடமையாகும்.

**செயற்பாடு**

1 **வீதி ஒழுங்குகள் பற்றிய தகவல்களை திரட்டி அவற்றைப் பற்றி கலந்துரையாடுக.**

2 **ஆசிரியரின் ஆலோசனையுடன் வீதி ஒழுங்கு அதிகாரியுடன் கலந்துரையாடி வீதி ஒழுங்கு சட்டங்களைப் பற்றி தெரிந்துக் கொள்க.**

பொது இடங்களில் பொதுமக்களின் பாதுகாப்பு அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பான பல சட்டங்கள் உண்டு. சட்டரீதியான வகையில் எமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் உரிமை உங்களுக்கு உண்டு. போக்குவரத்து தொடர்பான சட்டங்களைப் பாதுகாத்தல், கடைப்பிடித்தல் என்பன சாரதிகளினதும் பாதசாரிகளினதும் கடமையாகும். பாதசாரிகளின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பு சாரதிகளுக்கும், சாரதிகளின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பு பாதசாரதிகளுக்கும் உண்டு.



நாம் வாழும் சூழலானது எமது வீடு, பாடசாலை, கிராமம் என்பவற்றை உள்ளடக்கியதாகும். இச் சூழல் எமக்கு கிடைத்த பெரும் செல்வமாகும். எமது சுற்றுப்புறச் சூழலில் நீர், காற்று, மரம், செடி, கொடி, பறவைகள், விலங்குகள் என்பன காணப்படுகின்றன. நாம் நமது வீடு, பாடசாலை, சூழல் என்பவற்றை சுத்தமாக வைத்திருத்தல் எமது பொறுப்பாகும். எமது சுற்றாடலைப் பாதுகாத்தல் எல்லோரதும் கடமையும் பொறுப்புமாகும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**சுற்றாடலை பாதுகாக்க நாம் செய்யவேண்டியவை**

| வீடு பாடசாலை மற்றும் சூழலை பாதுகாக்க செய்ய வேண்டியவை | |
|---|---|
| | ⇨ குப்பை கூளங்களை அகற்றல்.<br>⇨ சூழலின் இயற்கை அம்சங்களை அழிக்காது இருத்தல்.<br>⇨ சூழலை தூய்மைப்படுத்தி அலங்கரித்தல்.<br>⇨ மிருகங்களை துன்புறுத்தாது இருத்தல்.<br>⇨ சூழல் மாசடைய வழிவகுக்கும் சத்தங்களை தவிர்த்தல்.<br>⇨ காடுகளை அழிக்காதிருத்தல்.<br>⇨ நீரை வீண்விரயம் செய்யாதிருத்தல்.<br>⇨ வளியை அசுத்தப்படுத்தாதிருத்தல். |

எமது நாட்டின் சூழல் பாதுகாப்பிற்காக பல வகையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சூழலை பாதுகாப்பதற்காக சுற்றாடல் பாதுகாப்பு சபையால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**செயற்பாடு**

1. சூழலை பாதுகாப்பதற்காக உமது பாடசாலையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுக.
2. சூழலை பாதுகாப்பது தொடர்பாக சூழல் அமைப்புக்கள் ஏற்படுத்தியுள்ள நோக்கங்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.

நாட்டின் பிரஜை என்ற வகையில் பாடசாலை, வைத்தியசாலை, புகையிரதம், பேருந்து நிலையம் என்பன அனைவருக்கும் சொந்தமான பொதுச் சொத்து ஆகும். இவை எல்லோரினதும் தேவைக்காக அமைக்கப்பட்டிருக்கின்றது. இதனை நாம் கவனமாக பாவிக்க வேண்டும். பாடசாலை மாணவர்கள் என்ற வகையில் பாடசாலையில் பாவிக்கும் மேசை, கதிரை, இலவசப் புத்தகம், உபகரணங்கள் என்பவற்றை பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டும். பொதுச் சொத்தை நாம் கவனமாக பேண வேண்டும்.

எமது நாடு பல இனங்களையும், பலமொழிகளையும், பல மதங்களையும் பின்பற்றுகின்ற மக்களைக் கொண்டிருக்கின்றது. எனினும் நாம் இலங்கையர் என்ற நோக்கில் செயற்பட வேண்டும் அவ்வாறு செயற்பட்டால் தான் எமது நாடு முன்னேற்றமடையும். இன மத பேதங்களுடன் செயற்படுவோமாயின் இலங்கை மக்கள் சமூகம் சீரழிந்து விடும் என்பதை மறக்கக் கூடாது.

**செயற்பாடு**

1 **எம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய பொதுச் சொத்துக்களைப் பட்டியல் படுத்துக.**

2 **எல்லா இன மக்களும் இலங்கையர் என செயற்படாவிட்டால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிக் கலந்துரையாடுக.**

## 7. 5 சட்டத்திற்கு உட்பட்டவகையில் உரிமைகளை அனுபவித்தல்

ஜனநாயக நாட்டில் வாழ்கின்ற பிரஜைகள் தமது பிறப்பு முதல் இறப்பு வரைஅந் நாட்டிலுள்ள உரிமைகளை அனுபவிப்பதற்கு உரித்துடையவராவர். அத்துடன் மற்றவர்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் நோக்குடன் நடக்க வேண்டும் இவ் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள் அரசியல் யாப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சட்டங்கள் பாராளுமன்றத்தால் அரசியல் யாப்பில் வரையப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடன படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளும் எமது சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நடைமுறையில் இருக்கும் சட்டத்திற்கு மதிப்பளித்து அதனைப் பின்பற்றி நடத்தல் எமது கடமையாகும். எமது உரிமைகளை நாம் சட்ட வரம்பிற்குள்ளேயே அனுபவிக்க வேண்டும் நமது உரிமைகளை அனுபவித்தலும் தாய் நாட்டைப் பாதுகாத்தலும் ஒரு பிரஜையின் முக்கிய கடமையாகும்.மக்களால் அனுபவிக்கப்படும் உரிமைகள் சட்டங்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மக்கள் உரிமைகளை அனுபவிப்பதை யாராலும் தடுக்க முடியாது.

மனித உரிமையை குடியியல் உரிமை, அரசியல் உரிமை என இரண்டு வகையாகப் பிரித்து நோக்கலாம்.

**குடியியல் உரிமை.**

- வாழும் உரிமை
- தனியாள் உரிமை
- கருத்து வெளியிடும் உரிமை, சொத்து வைத்திருக்கும் உரிமை, சமத்துவம் பற்றிய உரிமை
- விரும்பிய சமயத்தை பின்பற்றும் உரிமை
- சட்டத்தின் முன் சமமாக மதிக்கும் உரிமை
- கூட்டம் கூடும் உரிமை
- வேலை செய்யும் உரிமை தனது நாட்டில் விரும்பிய இடத்தில் வாழும் உரிமை
- குடும்ப வாழ்க்கையை நடத்தும் உரிமை
- கல்வியைப் பெறும் உரிமை
- தம் கலாசாரத்தை பின்பற்றல் மொழியை பயன்படுத்தல் தொடர்பான உரிமை

**அரசியல் உரிமை**

- ஆட்சியாளரை தெரிவு செய்யும் உரிமை (வாக்களித்தல்)
- அரசியல் கட்சியில் சேரும் உரிமை
- தேர்தலில் அபேட்சகராகும் உரிமை
- பிரசாரம் செய்யும் உரிமை
- தேவைகளை அரசாங்கத்திடம் முன்வைக்கும் உரிமை
- அரசில் பதவி வகிக்கும் உரிமை
- அரசினை விமர்சிக்கும் உரிமை

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய உரிமைகளை யாரும் இழக்கக் கூடாது. இவை அரசாங்கத்தால் பாதுகாக்கப்படும். குழப்பமில்லாது அமைதியாக ஒன்று சேருதல்; பொய்யான தகவல்களை வெளியிடாது, பேச்சு கருத்து சுதந்திரத்தை பயன்படுத்தல்; ஒரு கூட்டத்திற்கு துன்பம் விளைவிக்காது, விரும்பிய பிரதேசத்தில் குடியேறுவதன் மூலம் அடிப்படை உரிமைகள் மற்றவர்களை பாதிக்காத வண்ணம் அனுபவிக்கலாம்.

பொய்யான தகவல்களை வெளியிடுதல், ஒருவரது கௌரவத்தை பாதிக்கும் வகையில் பேசுதல், அறிக்கை விடுதல் என்பவற்றிற்குப் பேச்சு சுதந்திரத்தை பாவிக்கக் கூடாது. ஒன்று சேர்ந்து குழப்பங்களை விளைவிக்காமலும்,

சொத்துக்களை அழிப்பதற்கும் ஒன்று கூடும் உரிமையை பாவிக்கக் கூடாது. ஒரு கூட்டத்தினரை குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து விரட்டாமலும், கொலை செய்யாமலும் வாழும் உரிமையை பயன்படுத்த வேண்டும்.

ஜனநாயக சமூகத்தின் பிரஜைகள், எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற் கொள்ளும் போதும் தான் வாழுகின்ற பிரதேசம், தொழில், தான் சேரும் அரசியல் கட்சி தொடர்பான முடிவுகள் எடுக்கும் போதும், அது மற்றவர்களைப் பாதிக்கக் கூடாது. கலந்துரையாடல் மூலம் பிரச்சனைகள் தீர்த்தல், எதிர்க் கருத்துக்களை சகித்துக் கொள்ளல், மற்றவர் கருத்திற்கு மதிப்பளித்தல், ஒத்துழைப்புடன் செயலாற்றல், உரிமைகளை அனுபவித்து கடமைகளை செய்பவராக இருக்க வேண்டும்.

**செயற்பாடு**

**ஜனநாயக நாட்டில் பிரஜை ஒருவருக்கு உள்ள உரிமைகள் எவை? உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் எவை என கலந்துரையாடுக.**

## சிறுவர் உரிமைகள்

சிறுவர் சமுதாயம் எனும் போது 18 வயதிற்கு உட்பட்டவர்களைக் குறிக்கின்றது சட்டத்தின் மூலம் சிறுவர்களுக்கு பாதுகாப்பளிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையில் 1989ம் ஆண்டு சிறுவர் உரிமை பிரகடனப்படுத்தபட்டது. இப்பிரகடனம் இலங்கையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சிறுவர் பிரகடனத்தின்படி சிறுவர்கள் மதிப்பிற்குரியவர்கள் என்பதால் அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்புகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம், சிறுவர் அதிகார சபை போன்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



எனது உரிமை

- ஆரம்பக் கல்வியை கட்டாயமாவும் இலவசமாகவும் பெறல்.
- ஓய்வு நேரத்தை சிறப்பாகக் கழித்தல்.
- பொழுது போக்குகளில் ஈடுபடல்.
- பாகுபாடுகளில் இருந்து பாதுகாப்பு பெறல்.
- விரும்பிய கல்வியைப் பெறல்.
- சங்கங்களில் அங்கத்துவம் வகித்தல்.
- விரும்பிய மொழியைப் பேசுதல்.
- கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடல்.
- கலைகலாசார நடவடிக்கைகளில் ஈடுபடல்.

**செயற்பாடு**

1. சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புக்களை அறிந்து கொள்க.
2. சிறுவர்களின் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களும் அதற்கான காரணங்களையும் பற்றி கலந்துரையாடுக.

**சாரம்சம்**

மக்களினதும் பல நிறுவனங்களினதும் கூட்டு இணைப்பே சமூகமாகும். சமூகத்தில் குடும்பம், அயலவர், பாடசாலை, சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. இவற்றிற்கிடையிலான இடைத்தொடர்புகள் சமூக நிலவுகைக்கு அவசியமாகின்றன. சமூகத்தில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் கடமைகளும் பொறுப்புக்களும் காணப்படுகின்றன. சமூகத்தில் சட்டரீதியான கடமைகளும் பண்பாட்டு ரீதியான கடமைகளும் காணப்படுகின்றன.